# அருப்புக்கோட்டை நகராட்சி

**விளம்பி ஆண்டு கார்த்திகை மாதம் நாள் : 11.12 .2018 செவ்வாய் கிழமை மாலை 3.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :– திரு.சு.சு.சுரேஷ்குமார்**

**தனி அலுவலர்**

**பொருள் 1 :** இந்நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் நிதி 2018–19ன் கீழ் நகராட்சி பகுதியில் நேதாஜி சாலையில் உள்ள 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, அம்பலம் சுப்பன் தெரு, ஜவகர் சஙகம், உச்சி தெரு ஆகிய தெருக்களில் உள்ள பழைய பகிர்மான குழாய்களுடன் இணைக்கும் விதமாக நேதாஜி சாலை வழியாக புதிய பைப்லைன் பதிக்கும் பணிக்கு ரூ.30.00 இலட்சத்திற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மக்கள் தொடர்பு அலுவலர், மாவட்ட ஆட்சியரகம், விருதுநகர் அவர்கள் மூலமாக நாளிதழ்களில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக்கட்டணம் ரூ.20,362/- ஐ Express publications (மதுரை) லிமிடெட் நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண்.7975 /2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.553**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் காரியம் தனுஷ்கோடி தெரு கடை எண் 1ஐ குத்தகை உரிமம் பெற்று நடத்தி வந்த திரு.மணிகண்டன் என்பவர் தொடர்ந்து கடையை நடத்த முடியாத காரணத்தினால் நகராட்சி வசம் கடையை திரும்ப ஒப்படைத்துள்ளார். மேற்படி கடைக்கு 07.02.2019 வரை உரிமம் வழஙகப்பட்டுள்ளதால் 07.02.2019 முதல் 3 ஆண்டுகளுக்கு கடை உரிமம் வழஙக பொது ஏலத்தில் விட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1) மன்றம் அனுமதி வழஙகலாம்
2) 07.02.2019 வரை ஏற்கனவே உரிமம் பெற்றவரிடம் வாடகை வசூலிக்கலாம்.

ந.க.எண்.5138/2012 /அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.554**

**பொருள் 3 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட கீழே குறிப்பிடப்பட்டுள்ள பகுதியில் சாலைகள் அமைக்கும் பணிக்கு ஆகும் மதிப்பீடு தொகை ரூ.500.00 இலட்சத்தினை ஒருஙகிணைந்த நகர்ப்புற மேம்பாட்டுக்குழுமம் (IUDM 2018-19) ன் கீழ் முழுமான்யநிதி பெறுவதற்கான திட்டவிபரத்தினை உரிய நிதி உதவி கோரி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு சமர்பிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | பணியின் பெயர் | நீளம் (மீட்டர்) | அகலம் (மீட்டர்) | மதிப்பீடு ரூ. இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1. | வா.எண்.36, சுப்புராஜ்நகர் மெயின் தெரு, 9வது தெரு, 11வது தெரு, அண்ணா நகர் 1வது தெரு, வா.எண்.6 காயிதேமில்லத் கிழக்கு தெரு, வா.எண்.7 பெரியார் நகர் தெரு, அஜீஸ் நகர் 3வது தெரு 4வது தெரு 3வது 4வது 2வது தெரு, மீனாம்பினை நகர் தெரு, வா.எண்.5 சண்முகநாதபுரம் மேற்கு தெரு, வா.எண்.4 அன்பு நகர் 10வது தெரு, நெசவாளர் காலனி 2வது, | 2780 | 4.50 | 200.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| | 5வது, தெரு, வா.எண்.19 சந்திவீரண் தெரு, அய்யாசாமி தெரு, தில்லை சிதம்பரம் தெரு, வா.எண்.31 சப்பைராமசாமி தெரு, ஆதிநாராயணபுரம் தெரு, வா.எண்.9 வரகரிசி முனிவர் தெரு, வீரசின்னம்மாள் கோவில் தெரு, வா.எண்.15 வீரபண்ணம்மாள் தெரு, வா.எண்.13 கைலாச ஊரணி தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | | | |
| 2. | வா.எண்.14 பொன்னகரம் தெரு, வா.எண்.13 மெ.உ.அண்ணாமலை செட்டியார் தெரு, வா.எண்.9 எம்.டி.ஆர் நகர் வடக்கு, தேவாடெக்ஸ் காலனி, வா.எண்.7 இரயில்வேபீடர் ரோடு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய பேவர் பிளாக் தளம் அமைக்கும் பணி | 1230 | 6.00 | 100.00 |
| 3. | வா.எண்.32 இராமசாமிபுரம் சமுதாயக்கூட சாலை வா.எண்.26 சாலியர் பள்ளிக்கூட தெரு, வா.எண்.8 பூலுார் அம்மன் கோவில் தென்வடல் தெரு, வா.எண்.4 அன்பு நகர், நெசவாளர் காலனி 9வது தெரு, நெசவாளர் காலனி 6வது தெரு, வா.எண்.15 பாரதி நகர், வா.எண். 8 ஜவகர் சஙகம் தென்வடல் 1வது தெரு, ஜவகர் சஙகம் தென்வடல் 2வது தெரு, வா.எண்.9 தேவாடெக்ஸ், எம்.டி.ஆர் நகர் கிழக்கு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகாலுடன் கூடிய தார்தளம் புதுப்பிக்கும் பணி | 2820 | 6.00 | 200.00 |
| | **மொத்தம்** | | | 500.00 |

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.11147/2018/1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.555</u>**

**பொருள் 4 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகன எண் TN 67 BY 8537 வாகனத்திற்கான பழுது பணிகள் பார்த்து சரிசெய்திட மற்றும் தகுதிச்சான்று பெற 12.11.2018ல் விலைப்புள்ளி கோரியதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பணிந்து சமர்பிக்கப்படுகிறது.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | தொகை |
|---|---|---|
| 1. | ஸ்ரீ பாலமுருகன் ஆட்டோமொபைல்ஸ் | ரூ.21,700/– |
| 2. | ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் | ரூ.20,000/– |

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி வழங்கியுள்ள அருப்புக்கோட்டை ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை மன்றம் ஏற்கலாம். பொது சுகாதாரப்பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று அருப்புக்கோட்டை ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவினை வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2.பொது சுகாதாரப்பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவினை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7459/2018 /எச்2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.556**

**பொருள் 5 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அருப்புக்கோட்டை கிராமம் வார்டு : சி, பிளாக் :25, நகரளவு எண் 6/3 (சர்வே எண் :122/3) ல் 3.68 ஏக்கர் (14892.50ச.மீ.) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78, 172 H & UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன் படி வரன்முறைப்படுத்த கோரி திரு.எஸ்.ராமகிருஷ்ணன் மற்றும் என்.சீதாராமன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ.(மு)/ந.ஊ.து.இ.(மம) எண் : 524/2018, நாள் 02.02.2018 தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடத்தின் ஆவண எண் 4725/2018, நாள் 10.10.2018 மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஏற்று, நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.8882/2018 /எப்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.557**

**பொருள் 6 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட அருப்புக்கோட்டை நகரம் வார்டு : டி, பிளாக் : 38, டி.எஸ். எண்கள் 2(ப), 40ல், 0.469 ஏக்கர் (1899.48 சமீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78, 172 H & UD நாள் : 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.V.பழனிசாமி என்பவர் விண்ணப்பித்ததின் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களால் ம.வ (மு)/ந.ஊ.து.இ(மம) எண்.617/2018, நாள் 28.09.2018 தொழில் நுட்ப ஒப்புதல் பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்கா இடத்தின் ஆவண எண்.4995/2018 நாள் 26.10.2018 மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூங்காவினை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.9488 /2018 /எப்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.558**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட சொத்துவரி பெயர்மாற்றம் தொடர்பாக சென்னை உயர்நீதிமன்றம், மதுரை கிளையில் தொடரப்பட்ட வழக்கு எண் 39/2014 வழக்கிற்கு திரு.N.திலிப்குமார் வழக்கறிஞருக்கான ஊதியத் தொகை ரூ.8000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம். ந.க.எண்.2777/2014 /அ2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.559**

**பொருள் 8 :** இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு வாகன எண். TN 67 BY 8820, TN 67 BY 8824, TN 67 BY 8836, TN 67 BY 8842, TN 67 BY 8843 ஆகிய ஐந்து வாகனங்களுக்கு தகுதிச்சான்று பெற மற்றும் பழுதுபணிகள் பார்த்து சரிசெய்திட விலைப்புள்ளி கோரியதில் 28.11.2018ல் வரபெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

**1)** ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோ மொபைல்ஸ் ரூ.102500/–
**2)**ஸ்ரீ பாலமுருகன் ஆட்டோ மொபைல்ஸ் ரூ.103500/–

மேற்படி விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள அருப்புக்கோட்டை ஸ்ரீ மனோஜ்குமார் ஆட்டோமொபைல்ஸ் நிறுவனத்திற்கு வேலை உத்தரவினை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பொது சுகாதாரப் பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவினை வழங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2)பொதுசுகாதாரப்பணி அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவினை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.8336/2018 /எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.560</u>**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரிந்துவரும் உள் மற்றும் வெளிப்புற அலுவலர்கள் அலுவலக பணி நிமித்தமாக மேற்கொள்ளும் பயனங்களுக்கு 2018–19ம் ஆண்டிற்கான பயணப்படி வழங்க ஆகும் செலவினத் தொகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.10491/2016 /பி3

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.561</u>**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகராட்சி தொடர்பான வருமான வரி (E-TDS Return) நான்கு காலாண்டுகளுக்கு செலுத்திய வகைக்கு ரூ.15,000/– யை திரு.M.குமாராமி தணிக்கையாளர் அவர்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.31/2015 /பி1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.562</u>**

**பொருள் 11 :** சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018 – 19 ன் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சி பகுதியில் நேதாஜி சாலையில் உள்ள 10.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியிலிருந்து, அம்பலம் சுப்பன் தெரு, ஜவகர் சங்கம், உச்சி தெரு ஆகிய தெருக்களில் உள்ள பழைய பகிர்மான குழாய்களுடன் இணைக்கும் விதமாக நேதாஜி சாலை வழியாக புதிய பைப்லைன் பதிக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.30.00 இலட்சத்திற்க்கு விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் தலைவர் / மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறைகள் ஆணைஎண் ந.க.எண்.3786/2018/ஆ1, நாள்.12.10.2018ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதன்பேரில் 09.11.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.N.எர்ஷாத்கான் அருப்புக்கோட்டை | 4.97%மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |
| 2. | திரு.M.N.காத்துான்பீவி அருப்புக்கோட்டை | 8.18 %மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையைவிட 4.97 சதவீதம் அதிகமாக கொடுத்துள்ள திரு.N.எர்ஷாத்கான், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண். 7975/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.563**

**பொருள் 12 :** தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018–19ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வகம் மற்றும் குடிநீர் வழுகல் துறைக்கான மானியக் கோரிக்கை எண் 34, அறிவிப்பு எண் 14ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழஙக தானியஙகும் குடிநீர் மையஙகள் (Automatic Vending Centre) அமைக்கும் பணிக்கு ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் வீதம் மொத்தம் 20 இடஙகளில் ரூ.360.00 இலட்சத்திற்க்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.529, நாள்.08.10.2018ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 19.11.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் |
|---|---|
| 1. | M/s.Water Life India Pvt., Ltd., Hyderbad |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி M/s.Water Life India Pvt., Ltd., Hyderbad நிறுவனம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தபுள்ளி வழஙகி உள்ளதால் அந்நிறுவனத்தில் ஒப்பந்தபுள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.

**தீர்மானம் :** ந.க.எண். 9115/2018/இ1

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.564**

**பொருள் 13 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 7வது தமிழ்நாடு மாநில உயர்மட்டக்குழு (State High Powered Committee Meeting)கூட்ட நாள் 13.08.2018 ன்படி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட சப்பைராமசாமி தெரு பகுதியில் மைக்ரோ கம்போஸ்ட் யார்டு மற்றும் சுற்றுச்சுவர் அமைக்கும பணி மேற்கொள்ள மதிப்பீட்டுத்தொகை ரூ.54.00 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் ந.க.எண்2640/2015/ஆ1 நாள் 28.09.2016ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் 26.11.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.K.சுப்பரெட்டியார் அருப்புக்கோட்டை | 4.89 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

1. மதிப்பீட்டு விலையைவிட 4.89% அதிகமாக கொடுத்துள்ள திரு.S.K.சுப்பரெட்டியார், அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.
2. மேலும் மேற்கண்ட பணியின் அவசர அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழஙகியதையும் மன்றம் அஙகீகரிக்கலாம்.

ந.க.எண். 4453/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.565**

**பொருள் 14** : அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெற்றுவரும் பணிகள் மற்றும் நடைபெறவுள்ள பணிகளின் விபரஙகளை தினதந்தி, தினமணி நாளிதழ்களில் விளம்பரஙகள் செய்ததற்கு உரிய செலவினத்தொகை ரூ.41,580/-ஐ (தினதந்தி) The Daily Thanthi, Madurai மற்றும் ரூ.10,500/-ஐ (தினமணி) Express Publications (Madurai) Limited ஆகிய நிறுவனத்தாரர்களுக்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண். 8338/2018/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.566**

**பொருள் 15 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் நடைபெற்றுவரும் பணிகள் மற்றும் நடைபெறவுள்ள பணிகளின் விபரஙகளை தொழில்மலர் 2018 (மாலை முரசு) நாளிதழில் விளம்பரம் செய்ததற்கு உரிய செலவினத்தொகை ரூ.9,800/-ஐ மேற்படி நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண். 8338/2018/அ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.567**

**பொருள் 16 :** சாலையோர வியாபாரிகள் வாழ்வாதாரம் பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகு முறை சட்டம் 2014–(மத்திய சட்டம் எண் 7/2014) 37 வது பிரிவின் கீழ் வழஙகப்பட்டுள்ள அதிகாரஙகள் மற்றும் சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகு முறை விதிகள் 2015 மற்றும் தமிழ்நாடு சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை மற்றும் உரிமை வழஙகுதல் திட்டம் 2015ன் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின் அருப்புக்கோட்டை நகராட்சிக்கான சாலையோர வியாபாரிகள் வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் விற்பனை ஒழுஙகுமுறை துணை விதிகள் 2018 கீழ்கண்டவாறு ஏற்படுத்தப்பட்டுள்ளது. மேலும் மேற்படி துணை விதிகளை பொதுமக்கள் அறிந்துகொள்ளும் வகையில் தினசரி பத்திரிக்கையில் விளம்பரம் செய்திடவும் மற்றும் மாவட்ட அரசிதழில் பிரசுரம் செய்திட மேற்கொள்ளும் நடவடிக்கைக்கும் மன்றம் அனுமதிக்கலாம். மேலும் மேற்படி விதிகளை ஏற்படுத்த அஙகீகாரம் வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 4622/2017/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.568</u>**

**பொருள் 17 :** அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் முதிர்ந்த கொசுக்களை கட்டுப்படுத்த புகை மருந்து (Indoor Fogging) அடிக்க பயன்படுத்தப்படும் கேஸ் சிலிண்டர்கள் பொதுசுகாதார அவசர அவசியம் கருதி 500 எண்ணம் தேவைப்படுவதால் மேற்படி 500 எண்ணம் கேஸ் சிலிண்டர்களை வாஙகிடவும் அதற்கான உத்தேச செலவீனம் ரூ.2,15,000/– வரை செலவு செய்திடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 10910/2017/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.569</u>**

**பொருள் 18 :** விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை நகராட்சியின் 2011 மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி மொத்த மக்கள் தொகை 87722 ஆகும். இந்நகராட்சியில் மொத்தம் 36 வார்டுகள் உள்ளன. நகரின் மொத்த பரப்பளவு 14.96 சதுர கி.மீ, சாலைகளின் மொத்த நீளம் 104.56 கி.மீ. இந்நகரில் வைகை மற்றும் தாமிரபரணி கூட்டுக்குடிநீர் திட்டம் மூலம் கிடைக்கும் குடிநீரினைக்கொண்டு பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் வழஙகப்படுகிறது. தற்போது வைகை ஆற்றில் இருந்து சாரசாரியாக நாள் ஒன்றுக்கு 22.00 லட்சம் லிட்டரும், தாமிரபரணி கூட்டுக்குடிநீர்த்திட்டத்திலிருந்து 36.00 லட்சம் லிட்டரும் சேர்த்து 58.00 லட்சம் லிட்டர் கிடைக்கப்பெற்று பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகம் செய்யப்பட்டுவருகிறது.

வைகை குடிநீர் திட்டம் 1973ம் ஆண்டு முதல் செயல்பாட்டில் உள்ளது. திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்தில் இருந்து அருப்புக்கோட்டைக்கு பதிக்கப்பட்டுள்ள குழாய்கள் RCC குழாய்கள். மேற்படி குழாய்கள் பதிக்கப்பட்டு சுமார் 45 வருடஙகள் ஆகிவிட்டபடியால் பெரும்பாலான இடஙகளில் நீர்கசிவு அடிக்கடி குழாய் உடைப்பு ஏற்படுகிறது. 06.02.2018ம் தேதிய முதன்மை செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை அவர்களது தலைமையில் நடைபெற்ற இயக்குதல் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதி திட்ட குழு கூட்டத்தில் அருப்புக்கோட்டை வைகை குடிநீர் குழாய்கள் மாற்றியமைக்கும் பணிக்கு ரூ.600.00 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே பனிகுறிப்பு முதல் கட்டஙகுடி நீரூந்து நிலையம் வரை உள்ள பழைய 450mm RCC குழாய்களுக்கு பதிலாக புதிய 450mm DI குழாய்கள் மாற்றி அமைக்கும் பணியினை ரூ.600.00 இலட்சம் மதிப்பீட்டில் இயக்குதல் மற்றும் பராமரிப்பு இடைவெளி நிரப்புதல் நிதியின் கீழ் மேற்கொள்ள மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | திட்ட மதிப்பீடு | அரசு மான்ய நிதி | நகராட்சி பஙகுத் தொகை |
|---|---|---|---|---|
| 1. | பழைய RCC குழாய்களுக்கு பதிலாக புதிய DI குழாய்கள் பதிக்கும் (பனிகுறிப்பு முதல் கட்டஙகுடி நீரூந்து நிலையம் வரை) பணி | ரூ.600.00 இலட்சம் | ரூ.540.00 இலட்சம் | ரூ.60.00 இலட்சம் |

மேற்கண்ட பணிக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களிடம் நிர்வாக அனுமதி பெறவும் மேற்குறிப்பிட்டுள்ள நகராட்சி பஙகு தொகையுடன் பணிகள் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 8654/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.570**

**பொருள் 19 :** அருப்புக்கோட்டை நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவு கொசுப்புழு ஒழிப்பு பணிக்கு பயன்படுத்தக்கூடிய அபேட் மருந்து (RC 007 – Temephos Emulsifiable 50% EC) நகராட்சியில் இருப்பு குறைவாக உள்ளதால் Tamilnadu Medical Services Coporation Ltd அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர் Paramount Pesticides Limited, Chennai நிறுவனத்திடமிருந்து 100 லிட்டர் அபேட் மருந்து (RC 007- Temephos Emulsifiable 50% EC) உத்தேச செலவீனம் ரூ.80,000/– செலவில் வாங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பொதுசுகாதார அவசர அவசியம் கருதி Tamilnadu Medical Services Coporation Ltd அங்கீகாரம் பெற்ற விநியோகஸ்தர் Paramount Pesticides Limited, Chennai நிறுவனத்திடமிருந்து 100 லிட்டர் அபேட் மருந்து வாங்கிட தனி அலுவலர் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 10913/2018/எச்2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.571**

**பொருள் 20 :** அருப்புக்கோட்டை நகரம் வார்டு எப் பிளாக் 10, டவுண் சர்வே எண்கள் 4/1சி2, 4/4எ, 4/4பி, 4/4சி வார்டு : எப் பிளாக் 8, டி.எஸ்.எண்.1/3எ, 1/3பி, 1/3சி ல் 3.93 ஏக்கர் (15904.15சமீ) பரப்பளவில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78,172, H&UD நாள்04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திருமதி P.சுமதி என்பவர் விண்ணபித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 717/2018 நாள் 10.11.2018ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கியுள்ளார். மேற்படி ஒப்பதல் பெறப்பட்ட அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவில் உள்ள சாலை ஆவண எண் 5512/2018 நாள் 28.11.2018ல் மனுதாரரால் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி சாலை மற்றும் பூஙகாக்களை நகராட்சி ஏற்று நகராட்சி அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண். 10183/2018/எப்1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.572**

**பொருள் 21 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட பந்தல்குடி S.T.ராமசாமி தெருவில் திரு.P.போகராஜன் என்பவர் வீட்டின் அருகில் வாறுகால் இல்லாத காரணத்தினால் மழைகாலத்தில் தண்ணீர் செல்ல வழிவகை ஏற்படுத்த மழைநீர் வடிகால் அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.30,000/–ஆகும் மேற்கண்ட பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதி வழஙகலாம். ந.க.எண். 7909/2018/இ1

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.573**

**பொருள் 22 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட விருதுநகர் மெயின் ரோடு M.S.R. மருத்துவமனை எதிர்புறம் மழைநீர் வடிகால் மற்றும் கவரிங சிலாப் அமைக்கும் பணியினை மேற்கொள்ள உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட பணியினை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.10916/2018/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.574</u>**

**பொருள் 23 :** அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் டெங்கு காய்ச்சலை பரப்பும் முதிர்ந்த கொசுக்களை ஒழிக்கப் பயன்படுத்தப்படும் Indoor Fogging Machines முற்றிலும் பழுதடைந்து பயன்படுத்த முடியாத நிலையிலுள்ளதால் மேற்படி Indoor Fogging Machines இயந்திரஙகள் 15 எண்ணம் பொது சுகாதார பணி அவசர அவசியம் கருதி வாஙகிட உத்தேச செலவீனம் ரூ.3,60,000/– வரை செலவு செய்திட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.10911/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.575</u>**

**பொருள் 24 :** அருப்புக்கோட்டை நகரம் கதவு எண் 82(1) அஜீஸ் நகர் 4வது தெருவில் வசித்து வரும் திரு.S.சீனிவாசன் என்பவர் உயர்நீதிமன்ற அவமதிப்பு வழக்கு திரு.S.பாலகிருஷ்ணன் என்பவரால் தொடரப்பட்ட வழக்கு எண் (Contempt-PT) 415/2018 ன்படி இவ்வலுவலக ந.க.எண்.3486/2015 F1 நாள் 16.11.2018ல் வழஙகப்பட்ட அறிவிப்பு கடிதத்தினை ரத்து செய்யக்கோரி சென்னை உயர்நீதி மன்றம் மதுரை பெஞ்ச் கிளையில் W.P.No.23526/2018ல் ஆணையாளர் அருப்புக்கோட்டை நகராட்சி அவர்களை 3ம் பிரதிவாதியாக சேர்த்து வழக்கு தொடர்ந்துள்ளார் மேற்படி வழக்கிற்கு நகராட்சி சார்பாக உயர்நீதி மன்றத்தில் திரு.N.திலீப்குமார் ஆஜராகுவதற்கும் மற்றும் உத்தேச வழக்கு கட்டணத்திற்கான உத்தேச செலவிற்கும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.2954/2018/எச்1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலக குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.576</u>**

**பொருள் 25 :** அருப்புக்கோட்டை நகராட்சி பகுதிகளில் இரண்டாம் நிலை குப்பை சேகரிக்கும் இடம் மற்றும் பொது கழிப்பிடஙகள் மற்றும் பொது மக்கள் அதிகமாக புழஙகக்கூடிய பழைய, புதிய பேருந்து நிலையஙகளில் மக்கள் கூடும் இடஙகளில் இரண்டாம் நிலை குப்பைகள் அகற்றப்பட்டபின் அஙகு எழக்கூடிய துர்நாற்றத்தை தவிர்க்கப்பயன்படுத்தப்படும் லெமன் கிராஸ் ஆயில் 280 லிட்டர் (ஆஙகில புத்தாண்டு, கிறிஸ்துமஸ் மற்றும் பொஙகள் பண்டிகையை எதிர்நோக்கி) அவசர அவசியம் கருதி தேவைப்படுவதால் மேற்கூறிய அளவு லெமன் கிராஸ் ஆயில் கொள்முதல் செய்திட உத்தேச செலவீனம் ரூ.10,00,000 (வரிகள் உட்பட) வரை செலவு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.11170/2018/எச்2

**<u>தீர்மானம் :</u>**

மன்றம் அனுமதி வழஙக தீர்மானிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.577</u>**

**பொருள் 26 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 36 வார்டுகளில் உள்ள தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண் 1400, நாள் 29.07.2013ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனம் வழஙகிய குறைந்த ஒப்பந்தப்புள்ளியானது ஏற்கப்பட்டு இந்நகர்மன்ற தீர்மான எண் 2275 நாள் 28.08.2018ன்படி 01.10.2015 முதல் 30.09.2018 வரை தெருவிளக்கு பராமரிப்பு பணி மேற்கொள்ள உத்தரவு வழஙகப்பட்டது. தற்பொழுது மேற்படி நிறுவனத்தாருக்கு வழஙகப்பட்ட பராமரிப்பு காலம் 30.09.2018 உடன் முடிவடைகிறது.

மேலும் அரசாணை எண் 39 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் துறை (ந.நி–IV) நாள் 21.04.2017ன் படி, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித ந.க.எண்.35871/2014/இ1 நாள்27.04.2017ல் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள அனைத்து விளக்குகளையும் Energy Saving Lamps (LED Lights) and Engergy saving measureing அமைக்க மின்சேமிப்பு கணக்கீட்டு முகவர்கள் (Investment Grade Audit Agency) நியமனம் செய்யப்பட்டு திட்ட அறிக்கை தயார் செய்யும் பணி நடைபெற்றுவருகிறது. மேற்படி திட்டமானது விரைவில் நடைமுறை படுத்தப்பட உள்ளது. மேற்கண்டவாறு தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேலும் 3 ஆண்டுகளுக்கு தனியார் நிறுவனம் மூலம் மேற்கொள்ள வழிவகை இல்லாத சூழ்நிலையில் தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டிய அவசர அவசியம் கருதி இவ்வலுவலக தீர்மான எண் 525 நாள் 08.10.2018 ன்படி அதே விலைவிகிதத்திலேயே ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனத்திற்கு 08.10.2018 முதல் 31.12.2018 வரை மூன்று மாதஙகளுக்கு பணிகளை மேற்கொள்ள காலநீட்டிப்பு செய்து வேலை உத்தரவு வழஙகப்பட்டு பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டுவருகிறது.

தற்சமயம் மேற்கண்டவாறு காலநீட்டிப்பு செய்யப்பட்டு மூன்று மாதஙகள் டிசம்பர் மாதத்தோடு முடிவடைந்ததால் தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட அதே விலை விகிதத்திலேயே மேலும் ஆறு மாதஙகளுக்கு தொடர்ந்து தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள மேற்படி ஸ்ரீசுதர்சனா இன்ஜினியரிங ஒர்க்ஸ் நிறுவனம் சம்மதம் தெரிவித்து கடிதம் வழஙகியதன் அடிப்படையில் 01.01.2019 முதல் மேலும் ஆறு மாதஙகளுக்கு கால நீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

தெருவிளக்கு பணியின் அவசர அவசியம் கருதி மன்றம் ஒப்புதல் வழஙகலாம்.

ந.க.எண்.6380/2013/இ2

**தீர்மானம் :**

அலுவலக குறிப்பு அஙகீகரிக்கப்பட்டது.

**தீர்மான எண்.578**

தனிஅலுவலர்

அருப்புக்கோட்டை நகராட்சி